# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,425 — 1939 ம் ௵ தைமீ 6 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


# Part IV.—நான்காம் பாகம்.

## அரசாட்சியாரின் விளம்பரம்.

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்களைப்பற்றிய சட்டம்.

அறிக்கைப்பத்திரம் 209.

*தோட்டச் சம்பளக்காரிய சபை, காலி.*

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்தின் 8 (1) ம் பிரிவின்படி காலி அரசிறை வருமானப் பகுதியின் தோட்டச் சம்பளக்காரிய சபையார் 1939 ம் ௵ பெப்புருவரி மாதம் புதன்கிழமை 8 ந் திகதி 10·30 மணிக்கு தங்களின் காலிக் கச்சேரியில் நியாயாதிகார எல்லைக்குள் உள்ள கீழ் பகுதியிலும் மத்திமப் பகுதியிலும் உள்ள எல்லாத் தோட்டங்களில் ஆகக் குறைந்த வீதச் சம்பளங்களை மேற்கூறிய சட்டத்தின் 8 (3) ம்பிரிவினுற் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினைக்கொண்டு நியமிக்க எண்ணியிருப்பதை இத்தா லறிவிக்கப்படுகிறது.

இக்காரியத்தில் சம்பந்தமுடைய எவரும் யாதும் சொல்லவேண்டுமென்று விரும்பினுல் தானும் சமுகமாயிருக்க எண்ணுகிறதைப்பற்றிக் காரிய சபைத்தலைவருக்கு அறிவிக்கவேண்டும். 1938 ம் ஆண்டு டிசெம்பர்மீ 23 ந் திகதியைக்கொண்ட 209 ம் இலக்க அறிவித்தல் இத்தால் அழிக்கப்படுகின்றது.

டபிள்யு. ஜே. எல். ஞெஜோர்சன்,
தோட்டச் சம்பளக் காரிய சபைத் தலைவர், காலி.

காலிக் கச்சேரி,
1939 ம் ஆண்டு ஜனவரிமீ 4 ந் ௳.

---

## நகரசங்க அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்.

1920 ம் ஆண்டு 11 ம் இலக்கத் தத்தமிட ஆளுகைச் சட்டத்தின் 30 (3), (31) (1) ன் பிரிவுகளின்படி 1938 ம் ஆண்டு கார்த்திகைமீ 16 ந் திகதி மொறட்டுவா நகரசங்கக் கந்தோரில் இந்த நகர சங்கத்து 6 ம் பிரிவிற்கு இருபேரை முறையே நொமினேற் பண்ணப்பட்டது. ஆனுல் இருபேரும் தங்கள் பெயர்களை வேண்டாமென்று எடுத்துகொண்டார்கள். ஆகையால் இந்தப் பிரிவிற்கு ஓர் புதுத்தெரிவு செய்யவேண்டியிருக்கிறது. ஆகையால் தத்தமிட ஆளுகைச் சட்டத்தின் 34 ம் பிரிவின்படி மொறட்டுவா நகரசங்கத்து மேற்சொல்லிய பிரிவிற்கு ஓர் அங்கத்தவரை. 1939 ம் ஆண்டு மாசிமீ 15 ந் திகதி புதன்கிழமை தெரிவுசெய்துகொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அங்கத்தவராகத் தெரியப்பட முன்வரும் ஒவ்வொருவருடைய பெயரும் நொமினேசன் பேப்பர் என்று சொல்லப்பட்ட அத்தாள்மேல், எழுத்தில் கொடுபடவேண்டும். தெரியப்படுவதற்கென்று முன்வருகிற பெயர் வழிகாரர் அப்பிரிவிற்கு அங்கத்தவரைத் தெரிவுசெய்ய யோக்கியதை உடையவர்களின் டாப்பில் தமது பெயர்கள் உள்ளவர்களாகிய இருவரது கையொப்பமிட்டு அப்பத்திரம் கொடுக்கப்படுவதற்கென்று நியமித்திருக்கும் 1939 ம் ஆண்டு மாசிமீ 15 ந் திகதியன்று 10 மணிக்கு அல்லது முன்பதாகவே மொறட்டுவா நகர (டிஸ்திறிக்) சங்கக் கந்தோரில் கொடுக்கப்படவேண்டும்.

இப்பிரிவிற்கு அங்கத்தவர்களாகத் தெரியப்படுவதற்கென்று ஒன்றுக்கு மேலானவர்களின் பெயர்கள் கொடுக்கப்படுமாயிருந்தால் கீழே காட்டிய படி நியமிக்கப்பட்டிருக்கும் வாக்கு (வோட்) கொடுக்குமிடத்திலும் திகதியிலும் வாக்குப்பெற்றுக்கொள்ளப்படும்.

முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை வாக்கு (வோட்) பெற்றுக்கொள்ளப்படும்.

| வாக்குவோட் கொடுக்கும் 6 ம் பிரிவு | திகதி 1939 ம் ஆண்டு. |
|---|---|
| ஞேமன் கத்தோலிக்க பாடசாலை கத்துக்குறுண்ட | பங்குனிமீ 4 ந் திகதி |

டபிள்யு. ஈ. ஹெறாப்டே,
மேல் மாகாண அரசாட்சி ஏசண்றர்.

1938 ம் ௵ மார்கழிமீ 20 ந் ௳.

---

## இலங்கை சேவிங் வங்கி வட்டி அறிவித்தல்.

இலங்கை சேவிங்வங்கி மூன்றும் விதானப் பிரகாரம் 1939 ம் வருடத்தில் சேமிப்போர்களுக்கு நூற்றுக்கு 3 வீதம் வட்டி கொடுக்கப்படுமென்று இலங்கை சேவிங் வங்கின் காரிய கர்த்தரால் இத்தால் அறிக்கையிடப்படுகிறது.

என்றி ஏ. கேமற்,
காரியதரிசி.

1939 ம் ௵ ஜனவரிமீ 4 ந் ௳.

---


PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

I——J. N. 80449—148 (12/38)
T 1